RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21s116

OPEN ACCESS

# பாரதி - ஒரு கருத்து முதல்வாதி

ப.ரேவதி [அ, *]

[அ] தமிழ் மொழித்துறை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை-600005, தமிழ்நாடு, இந்தியா

# Bharathi an Idealist

P. Revathy [a, *]

[a] Department of Tamil Language, University of Madras, Chennai-600005, Tamil Nadu, India

* Corresponding Author: revathypa@gmail.com

Received: 04-11-2020
Revised: 01-06-2021
Accepted: 03-06-2021
Published: 12-06-2021

Check for updates

## ABSTRACT

The beginning of 19th century was a time of scientific and technological development and the development of education for a particular community. Bharathi, who celebrated international politics had phrased “Aagavendru ezhunthathu paaryugap puratchi” (Translation: O! See the glorifying revolution) about the Russian Revolution. Bharathi is also immersed in the idealism of taking the natural phenomenon to the divine level without clarifying it. It can be seen in his writings about myths in general. We can also observe several differences among his poems and prose. He had incorporated lesser vernacular words like Sanskrit in his prose in comparison to his poems. This is also one of the evidents to outlay that he had given more priority to the concept in particular. To define Bharathi as an idealist, there are several grounded concepts have clinched. For say, the political contexts, social contexts, the attraction towards the feudalist society, searching answers within himself and with the divine, experiences with his family and the knowledge which had driven from his life experiments were the main concepts of his writings rather than the scientific explanations. With this notion the present research article has aimed to limelight his idealism in particular.

**Keywords:** Bharathi, Idealist, Concepts, Divine.

## முன்னுரை

தமிழ் இலக்கியப் பரப்பை நேர்கோட்டுத் தன்மையுடன் ஆராய்ந்தால் பாரதிக்கு முன் - பாரதிக்குப் பின் என்ற வரையறையோடு பார்க்க இயலும். இத்தகு பரந்துபட்ட கருத்துரு வேறு எந்தக் கவிஞனுக்கும் கிடைக்காத பேறு. வாழ்க்கையிலும் எழுத்து உலகிலும் நூற்றாண்டைத் தொட்டு விட்ட பாரதி இன்றளவும் போற்றவும் படுகிறார் அதே நேரம் தூற்றவும் படுகிறார் ஏன் இந்த முரண்நிலை?

"கற்றோர்க்குச் செல்லுமிட மெல்லாம் சிறப்பு" என்ற முதுமொழி பாரதிக்கு ஏன் பொருந்தவில்லை? எழுதிய காலம் தொடங்கி இறுதிவரை ஒரு முரண்பட்ட சமூக வரலாற்றையே உற்று நோக்க முடிகிறது. பிராமண சமூகத்தில் பிறந்ததால் ஒருவர் உயர்த்தப்படுவது என்ற அரசியல் மரபு இன்றளவும் தொடர்கிறது. அத்துடன் தன் சமூகத்தைச் சுய பரிசோதனைக்கு உட்பட்டவர்களைத் தூக்கி எரியும் அரசியல் மரபும் தொடர்கிறது. இத்தகு சூழலோடு பாரதியை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

பாரதியின் பாடல்கள் நாட்டுடைமையாக்கப்பட்ட பிறகுதான், ஆன்மீகவாதம் பேசிய ராஜகோபாலாச்சாரியார், முதலிலிருந்தே இனவாதத்தை முன்மொழிந்த பாரதிதாசன், பகுத்தறிவை முழங்கிய அண்ணாதுரை, பொதுவுடைமைத் தத்துவத்திற்காகப் போராடிய ஜீவானந்தம் என அனைத்துத்

தரப்பினரும் பாரதியைக் கண்டறிந்தார்கள். இத்தகு சிறப்பு சமகாலக் கவிஞர் யாருக்கும் கிடைக்காத பேறு ஆகும். எல்லாவற்றையும் தன்னகத்தே இணைக்கும் வல்லமை பாரதிக்கு மட்டுமே வாய்த்தது ஒரு நகைமுரண் தான்.

## சர்வதேச அரசியல்

உலக நாடுகளைப் பிடித்த ஐரோப்பிய அரசு தன் முதலாளித்துவ வளர்ச்சிக்கு அடிமை நாடுகளைப் பயன்படுத்தியது. அதற்கு ஏற்ற கல்விமுறையை அந்நாட்டு மக்களுக்கும் வழங்கியது. இயல்பாக பிராமண சமூகத்தில் பிறந்தவர் என்பதால் அரசப் பரம்பரையின் உதவியைப் பெறக் கூடிய வாய்ப்பும் பாரதிக்கு அமைந்தது. தந்தையின் மரணத்துக்குப் பின் காசிப்பயணம் வேறொரு பரிணாம வளர்ச்சிக்கு வித்திட்டது. காசியில் உலக இலக்கிய ஆளுமைகளின் அறிமுகக்தையும் வாசிப்பின் ஊடாக பெற்றார். தந்தையின் அரவணைப்பு கிடைக்காத தருணத்திலும், தந்தையின் மரணத்தில் உள்ள வியாபார முதலாளித்துவத்தை சரியாக புரிந்தும் கொண்டார். சமூகத்தின் வாயிலாக பெற்ற கல்வியும், உலக இலக்கியம் வாயிலாக பெற்ற கல்வியும் ஒருசேர தன் படைப்புகளில் வெளிப்படுத்துகிறார்.

1905-ல் ஆசிரியர் பணியைத் துறந்து பத்திரிக்கை உலகிற்குத் தடம் பதிக்கிறார். இதழியலாளராய் மாறிய பாரதிக்கு, துறைதோறும் ஏற்பட்ட அதீத வளர்ச்சிக்கு அவரின் பல்துறை சார்ந்த அறிவே பெரிதும் உதவியது. பத்திரிக்கையாசிரியர் பணியும் தேசிய விடுதலை இயக்கத்திற்கு பங்களிக்கும் வகையில் அமைந்துவிடுகிறது. தேசிய விடுதலை இயக்கக் காலத்தை கோ.கேசவன், "1900 முதல் பத்தாண்டுகளில் இங்கே சமூக நிலைகளும், அவற்றையொட்டிய முரண்பாடுகளும் சற்றே வேறுபட்டுக் காணப்பட்டன. இந்தியாவின் அடிநிலை மக்களுக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் இடையிலான பகை முரண்பாடு படித்த கீழ்த்தட்டு நடுத்தரவர்க்க அறிவாளிகளின் அறிவுரீதியான முரண்பாடு; தரகுத்தன்மைக் கொண்ட தேசமுதலாளிகளின் சந்தை வேண்டி அலைந்த நட்பு முரண்பாடு" என்று விவரிக்கிறார். இதனடிப்படையில் காலச் சூழலையும், வர்க்கச் சூழலையும் ஒப்பு நோக்க வேண்டி உள்ளது.

மேலும் உலக அரங்கில், ஐரோப்பாவிலும் ஆசியாவிலுமாக வியாபித்து ஆண்ட ஏகாதிபத்திய வல்லரசுக்கு துணை நின்ற ருஷ்யா ஜார் மன்னன் ஒரு புறமும் முதலாளித்துவ வளர்ச்சியில் முற்றி ஏகாதிபத்தியமாக பரிணமித்துவிட்ட ஒரு புதிய வல்லரசு ஜப்பான் ஒரு புறமும் என உலக மகா யுத்தம் தொடங்குவதற்கான காலச்சூழலும் அமைந்தது. இம்மகாயுத்தத்தின் முடிவில் இந்தியாவிற்குச் சுதந்திரம் கிடைத்துவிடும். பிரிட்டன் தாமே முன்வந்து சமத்துவத்தையும் சுதந்திரத்தையும் வழங்கிவிடும் என எண்ணி ஏமாந்த தலைவர்களில் பாரதியும் ஒருவர் தான்.

தொழில் துறையிலும் பிரிட்டிஷ் மூலதனக் குவியல் உண்டு என்பதனையும், அதற்கு இங்குள்ள இந்திய முதலாளிகள் உதவி புரிவதையும், ஆங்கிலேயர் - இந்திய முதலாளிகளின் கூட்டாளி உறவு குறித்த தெளிவும் தன் தந்தையின் தொழில் நஷ்டத்தின் வாயிலாகப் புரிந்து கொள்கிறார். அந்தச் சூழலில்தான் சுதேசிக்கப்பலும் விடப்படுகிறது. அந்திய நாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்கு நாம் துணை போகக்கூடாது என்ற முன் வரைவும் விழிப்புணர்வும் கோலோச்சுகிறது. பொருளாதாரச் சுரண்டலும் உலகம் முழுவதும் வியாபித்து உள்ளது என்பதைப் பாரதியின் கருத்துப்படங்கள் மூலமாக அறிந்து கொள்ள முடிகிறது. பொருளாதாரச் சிந்தனைக்கு சமூக இயங்குதலுக்கும் தொடர்பு உள்ளது என்பதையும், அதனால் தான் தன் தந்தையின் மரணம் நிகழ்ந்தது என்பதையும் உணராதவர் அல்லர் பாரதி.

”ஒரு சகாப்தத்தின் கர்ப்பத்திலிருந்து தோன்றினான், பாரதி, மற்றொரு சகாப்த்தின் ஆற்றலைத் தன் கருவின் கொண்டு அதன் மாற்ற நிலைகளை உள்வாங்கிப் பரிணமித்த பாரதியை” அக்காலப் போக்கிலே ஆராய வேண்டும் என்ற ஆர்.கே. கண்ணன் கூற்றோடு ஒப்பு நோக்க வேண்டும் (Kannan, 1965).

## கருத்து முதல்வாதம்

மார்க்சியம் என்பது அறிவியல் திறனாய்வு. காலச்சூழலோடு அறிவியல், வர்க்க நிலைப்பாட்டோடும் இணைந்து ஆய்வு செய்வது மார்க்சியம் திறனாய்வு. ஆனால் கருத்து முதல்வாதம் என்பது நேரெதிர்நிலை கொண்ட திறனாய்வாகும். பாரதியை இளம்எகிலியர்களோடு ஒப்புமைப்படுத்த இதுவே காரணம் ஆகும். இளம்எகிலியர்கள் 'அந்நியமயமாதல்' என்ற கோட்பாட்டை உயர்த்துகிறார்கள். எல்லாவற்றையும் துறந்த மனப்பான்மையே அந்நியமயமாதல் ஆகும் (Maniyarasan & Marx, 2007). இதனையே பாரதியும் அத்வைத நிலையில் முதிர்ச்சியுறும் ஞான வழியை கண்டறிகிறான். அஃதென்ன வென்றால் 'விதி பயன் வாழ்வது' என்ற அந்தியமயமாதலுக்குச் செல்வது. உனக்குள் இருக்கும் ஒளியை உன் ஞானத்தின் வழி தேடு என்ற மெய்யியலைக் காண முடிகிறது. "பரம்பொருள் ஒன்று. அந்த ஒன்றே பலவாகித் தோன்றுகின்றது. அந்த ஒன்றிற்கே பல பெயர்களும் வடிவங்களும் கற்பிக்கப்படுகின்றன" என்பதே வேதங்கள் உரைக்கும் மெய்ப்பொருள் என்று பாரதி கொள்கிறார். மேலும், "இறைவன் உரைத்த வேதம் மனிதர்களின் மொழியில் இல்லை உலகத்தவர்கள் வேதமெனச் சொல்பவை வெறுங்கதைத் திரட்டு அவற்றில் இறைவன் சொன்ன உண்மையில்லை ஆனாலும் மனிதர்தம் வேதங்களில் ஒரு சில மட்டுமே கலந்துள்ளது. உண்மை எதுவோ அதுவே வேதம்" என்கிறார் பாரதி வேதத்தின் பெயரால் புனைவு செய்யப்படும் கதைகளைப் பாரதி உடைக்கிறார் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை (Parthibaraja, 2011).

## தொன்மக் கருத்துக்கள்

இந்திய மெய்ப்பொருள் மரபில் இருந்த ஈடுபாடு இந்து சமய மீட்டுருவாக்கத்தில் கொண்டிருந்த ஈடுபாடு சமய அடிப்படையில் மக்களை ஒன்று திரட்டும் தேவையிருந்த காலச்சூழல் போன்ற காரணத்தால் பாரதி தொன்மங்களைக் கையாள்கிறார் என்ற பாரதிபுத்திரன் கருத்து உற்று நோக்கத் தக்கதே (Kailasapathy, 1999).

"இவ்வுலகு அதனது லீலை" என்பதிலும் "ஆக்கம் நீக்கம் யாதுமதன் செய்கை" என்பதில் பாரதியின் நிலையை உணரமுடிகிறது. மேலும் தொன்மப் படிமங்களில் உள்ள சிவன், முருகன், கண்ணன், பராசக்தி, காளி, துர்க்கை, பாஞ்சாலி, இராதை, வள்ளி, மாரியம்மன் போன்றவற்றை அதிகமாகப் பயன்படுத்தி உள்ளார். குறிப்பாக தமிழ் தொல்படிமங்கலான முருகன், வள்ளி, மாரியம்மன் குறித்த பதிவுகளும் காணக்கிடக்கின்றன.

"புராணங்கள் மீதான பாரதி பார்வையில், படைத்தல், காத்தல், மாற்றுதல், அருள்செய்தல், வலியுடைமை, தெளிவுடைமை, ஒளியுடைமை, எங்கும் பரந்திருக்குந்தன்மை, பல படத் தோன்றுந் தன்மை....." தெய்வம் ஒன்று என்னும் கோட்பாட்டின் ஊன்றி நின்றுகொண்டவன் பாரதி. உலகத் தோற்றமும் உலக இயக்கமும் அதற்கு அப்பாற்பட்டதொரு சக்தியின் விருப்பு வெறுப்புச் சார்ந்தது என்ற பாரதியின் கருத்தே கருத்துமுதல்வாதத்தின் அச்சாணி ஆகும். இத்தொன்ம வடிவங்களுக்குக் கொடுக்கும் மரபையே கேள்விக்கு உட்படுத்த வேண்டி உள்ளது. 'தொன்மம் என்பது பழமையே'. பழமையைப் போற்றிப் பாடவில்லை. ஆனால் முற்றும் முழுவதுமாக அறுத்துவிடவும் இல்லை. இயக்கவியல் உணர்வைப் பாரதியியலில் புரிந்துகொள்ள உதவுகிறது (Kailasapathy, 1983).

ஒவ்வொரு விஷயத்திலும் முரண் உண்டு. முரணை அழுத்தமாகப் பதிவும் செய்கிறார். பழமைவாதத்தை முற்றிலும் புறந்தள்ளிவிடவில்லை. ஆனால் பழமையிலிருந்து புதுமையை மேற்கொள்ள விரும்புகிறார். இதனையே சாசுவதம் என்ற மரபின் வழி காண முடிகிறது. அசையா நிலை, நித்தியம் போன்றவற்றையும் காண முடிகிறது.பாரதியின் கவிதை மரபிலும் கட்டுரை மரபிலும் பெரிய வேறுபாடு உணர முடிகிறது. கட்டுரையில் உள்ள அறிவுச் செறிவு கவிதையிலும் வெளிவர கட்டுடைக்கிறார் பாரதி. சொல்லாடலில் உள்ள ஆரிய வழக்காறுகளும் இதற்குச் சான்றளிக்கிறது. அந்நியமாதல் என்ற நிலையை இங்குப் பொருத்திப் பார்க்க வேண்டியிருக்கிறது. தன் கருத்துக்கு எது இடமளிக்கிறது அதற்கு ஏற்ற வடிவமாற்றமும் செய்யப்படுகிறது. இலக்கிய வடிவமாற்றத்திற்குப்

பாரதியின் கருத்து முதல்வாதத்தை ஏற்றுக் கொள்ள முடிகிறது. ஆனால் சொல்லக்கூடிய பொருளிலும் சமூக இயங்களிலும் கருத்து முதல்வாதத்தை ஏற்க முடியாது (Kailasapathy, 1983).

"இந்திய தத்துவங்களுக்கே உரிய சாபக்கேடு என்பது தத்துவ மரபை இறுதியில் கடவுளோடு இணைத்து விடுவதே" என்ற சட்டோபாத்யாயாவின் கருத்தை உற்று நோக்க வேண்டி உள்ளது. இந்தியத் தத்துவம் அனைத்தும் ஆன்மீகமயமானவை; உள்ளுணர்வே அவற்றுக்கு அடிப்படை, தருக்க முறையை ஏற்காதவை என்ற கருத்து உருவாக்கத்தால் நம் தத்துவமரபு தோல்வியுற்று வருவது நம்முன்னே தெரிகிறது. இத்தத்துவத்தில் பாரதியும் நின்றுவிடுகிறார் என்பதே காலத்தின் முடிபாயிற்று. எந்தவொரு சிக்கலுக்கும் தன்வயத்திலிருந்தும் நிகழ்காலத்திலிருந்தும் பெற்ற பட்டறிவை வைத்துத் தீர்வு சொல்கிறார் பாரதி. "தத்துவாதிகள் இதுகாலவரை உலகை விவரித்து வந்துள்ளனர் எமது கடமையோ அதனை மாற்றியமைப்பதாகும்" என்ற மார்க்ஸ் கூற்று நினைவுக் கூறத்தக்கதாகும் (Sivathamby, K., & A., Marx, 1984).

சங்க இலக்கியத்திற்குப் பின் தோன்றிய மணிமேகலையில் உள்ள தருக்கம் என்பதும் நம் மரபுதான். காலந்தோறும் முரணறு தருக்கவியலும் நம்மோடு பயணம் செய்கிறது. ஆனால் ஏதேனும் மதத்தோடு தொடர்பு செய்து வாத, விவாதம் தோல்வியுற்றதும் அத்தருக்கம் தோல்வி அடைவதும் நம் வரலாறே. இச்சுழலில்தான் இயக்கவியல் பொருள்முதல்வாதத்தை மார்க்ஸ் முன்மொழிகிறார் (Sivathamby & Marx, 1984).

சர்வதேச அரசியல் அறிந்த பாரதிக்கு மார்க்ஸ் மாற்றித்தின் வழியில் நம்பிக்கை இல்லாமல் போனது ஏன்னென்று தெரியவில்லை. "பொதுமைச் சிந்தனையைப் புரிந்து கொள்வதற்கு இன்றியமையாக் கூறாகிய வர்க்க முரண்பாட்டினை பாரதியார் புரிந்து கொள்ளவும் இல்லை ஏற்றுக் கொள்ளவும் இல்லை" என்ற க. கைலாசபதியின் கருத்தை உற்று நோக்க வேண்டியுள்ளது (கைலாசபதி, 1999).

## சோசலிசக் கருத்து

சோசலிசக் கருத்துக்களோடு முற்றிலும் இணக்கமாகவோ, முரணாகவோ பாரதி நடந்து கொள்ளவில்லை. அவரின் பார்வையைச் சுருங்கிப் பார்த்தால்,

- தனியார் நிலவுடமையைப் பாரதி எதிர்க்கவில்லை. நிலத்தை அரசோ மக்களோ பறிக்கக் கூடாது.
- விளைச்சலை ஒருவர் மட்டுமே எடுத்துக் கொண்டு ஏனையோரை பட்டினி போடக் கூடாது. எல்லோருக்கும் உணவு கொடுக்க வேண்டும்.
- முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையில் மனஸ்தாபம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
- தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்கள் நியாயமான பிரயத்தனங்களெனினும் அவை வரவேற்கப்படவில்லை.
- தொழிலாளர் வர்க்க அரசு பற்றி எவ்வித சாதகமான குறிப்புரையும் இல்லை.

பாரதி கூறும் எல்லோருக்கும் அமரத்துவம் அளிக்கும் நன்முறை சோசலிசம் அன்று பண்டைய நிலப்பிரபுத்துவப் பொருளாதாரத்தின் சாரமான அம்சங்களையும் மேலை நாட்டுத் தொழிற்சங்க ஆட்சி இயக்கக் கொள்கைகளையும் இணைத்துப் பிறப்பித்த கலவையாகும் என்ற கோ.கேசவன் கருத்து மிகவும் நுட்பமானது. சோசலிச கவிஞனாக பாரதி இல்லையே என்ற வெற்றுப்புலம்பல் இவ்வாய்வின் நோக்கம் அன்று. சோசலிசக் கருத்துக்கள் தமிழகத்ததில் வேரூன்றியக் காலத்தில் பாரதி வாழ்ந்தார். ஆனால் சோசலிசக் கவிஞன் பாரதி அல்லன் என்பதிலும் சோசலிசக் கருத்தை ஏற்றவர் என்பதிலும் உடன்பட வேண்டியும் இருக்கிறது.

இவ்விடத்தில் டால்ஸ்டாயின் கவிதைக்கும், கவிஞனுக்கும் லெனின் கூறிய கூற்று உற்று நோக்க வேண்டியதாகும். அதாவது டால்ஸ்டாயின் படைப்புகளில் ருஷ்ய வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டுகிற வேளையில் கிறிஸ்துவின் மீது மயக்கம் கொண்ட நிலப்பிரபுத்துவச் சிந்தனையும் இழையோடி இருக்கிறது. இதனைக் கண்ட லெனின் டால்ஸ்டாயின் பார்வையிலுள்ள முரண்பாடுகள் எல்லாவற்றையும் இன்றைய உழைக்கும் வர்க்கம் இயக்கம் மற்றும் சோசலிச நிலைப்பாட்டிலிருந்து கொண்டு மதிப்பிடக்கூடாது என்கிறார். இதனை அடியொற்றியே இவ்வாய்வு கூற விழைவது யாதெனில், பாரதி என்ற ஆளுமையை ஒரு சட்டகத்துள் அடக்க முயற்சி செய்ய வேண்டாம். நம் தத்துவத்தைப் பாரதி கூறுகிறார் என்று ஓர்மைத் தனத்தில் ஆராய வேண்டாம். பாரதியைப் பாரதியாகவே பார்ப்பது நலம்.

“நாகரிகத்தின் பரிணாமத்தில் ஒரு புதிய அடிவைப்பு, ஒரு கலைவடிவத்தைத் தோற்றுவிக்கும் போது; சமுதாயச் சிந்தனையை அரைகுறையாக வெளியிடுகிற பற்பல ஆற்றல்கள், அதை முழுமையாக வெளியிடுகிற ஓரிரு மகாமேதைகள் சுற்றிலும் தோன்றுகின்றனர்” என்ற பிளெகானவ் கருத்து பாரதிக்கு பெரிதும் பொருந்தும்.

## முடிவுரை

ஒரு பக்கம் புனைவுகளைக் கட்டித் தெய்வநிலைக்கு உயர்த்துவது, மறுபக்கம் புனிதத்தை உடைப்பதாகக் கூறித் தராதரமற்று இழிவுபடுத்துவது என்ற இரண்டு வித போக்கும் பாரதியியலின் ஆய்வுக்குத் தடையாகத்தான் இருக்கும். பாரதியைக் கருத்து முதல்வாதி என்று கூறுவதற்கான அரசியல் சூழல், சமூகச்சூழல், நிலவுடைமைச் சமூகத்தின் மீது இருந்த காதல், விடையைத் தன்னிடத்திலும், தெய்வத்திடமும் தேடும் மரபு, தன் குடும்பம், தன் வாழ்வியல் சார்ந்த சுய அறிவு முன்னிறுத்தி மட்டுமே எழுதி உள்ளார். அறிவியலை முன்னிறுத்தவில்லை. ஜெர்மானிய இளம் எகலியர்கள முன்னிறுத்தும் அந்நியமாதலை பாரதியின் படைப்புகளிலும் காண முடிகிறது. சோசலிசக் கருத்தை மட்டுமே ஏற்றுக் கொண்டவர். பொருள் முதல்வாதத்தை பயன்படுத்த முயற்சி கூட செய்யவில்லை. இது அறியாமையால் நிகழ்ந்தது அன்று; உலகை விவரித்த பாரதி வடிவத்திலும், கருத்துக்களிலும் மாற்றம் செய்தார் என்னும் பொழுது சமூக இயங்கியலுக்கான மாற்றை ஏற்க மனம் இல்லை என்பது தெளிவு. எனவே பாரதியின் படைப்புக்களில் கருத்துக்கே முதன்மை இருப்பதும் அதற்கேற்ற வடிவங்களைப் பயன்படுத்தியதையும் காண முடிகிறது என்பதால் பாரதி - ஒரு கருத்துமுதல்வாதியே என்று இவ்வாய்வு எடுத்துரைக்கின்றது.

## References

Kailasapathy, K., (1983) Bharathi Aaivugal, 1st edition, Kumaran Pathippakam, Chennai, India.
Kailasapathy, K., (1983), Ilakkiya Sinthanai, Kumaran Pathippakam, Chennai, India.
Kailasapathy, K., (1999) Samoogaviyalum Ilakkiyamum, New Century Book House, Chennai, India.
Kailasapathy, K., (1999), Oppiyal Ilakkiyam, Kumaran Pathippakam, Chennai, India.
Kannan, R.K., (1965), Pudhuneri Kaattiya Bharathi, 1st edition, New Century Book House, Chennai, India.
Maniyarasan P., & Marx, A., (2007) Bharathi ooru samugaviyal parvai, 1st edition, Thozhamai Veliyedu, India.
Parthibaraja, K., (2011) Bharathi, 1st edition, New Century Book House, Chennai, India.
Sivathamby, K., & A., Marx, (1984) Bharathi Maraivu Muthal Mahakavi Varai, New Century Book House, Chennai, India.

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License